பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 14 ஞாயிற்றுக்கிழமை 31.10.2021 கதிர் 223

# நீக்கப்பட்டது பயணத் தடை

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக அமுல்படுத்தப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை இன்று காலை 4 மணியுடன் நீக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

2



# கன்னத்தில் அறைவோம்

## பங்காளிக் கட்சிகளுக்கு 'மொட்டு' கடும் எச்சரிக்கை

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர்களை இலக்குவைத்து பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தொடர்ந்தும் சொற்போர் தொடுத்தால், பங்காளிகளின் கன்னத்தில் அறைவதற்குக் கூட நாம் தயார்.

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

அரசுக்குள் இருந்துகொண்டு சுகபோகங்களை அனுபவித்து விமர்சனங்களை முன்வைப்பதைவிட, வெளியில் சென்று முதுகெலும்புடன் விமர்சனங்களை முன்வைப்பதே மேல்.

2

# ஞானசாரரின் நியமனத்துக்கு எதிராக நீதி அமைச்சர் சப்றியும் போர்க்கொடி!

## 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணி தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனவும் கைவிரிப்பு





பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற செயலணி அமைக்கப்பட்டமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்தார்.

2

# 'ஏ 30' கொரோனா வைரஸ் திரிபு இலங்கையையும் தாக்கக்கூடும்

## எச்சரிக்கின்றது அரசு



அநேகமான உலக நாடுகளை தற்போது அச்சுறுத்தி வரும் 'ஏ 30' என்றழைக்கப்படும் கொரோனா வைரஸ் தொற்றின் புதிய திரிவு தொடர்பில் இலங்கையிலும் பரவும் அச்சுறுத்தல் நிலை இருக்கின்றது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2

# எனக்கு ஆலோசனை வழங்கவே ஞானசாரரைத் தெரிவு செய்தேன்

## நீதி அமைச்சராக சப்றியைத் தெரிவு செய்தபோதும் இவ்வாறு எதிர்ப்பு வந்தது எனக் கோட்டாபய பதிலடி



'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கொள்கை வரைபை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணியின் தலைமைப் பதவி பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டமையானது தனக்கு ஆலோசனை

2

# குடாநாட்டில் வெள்ளப் பாதிப்புகளை நேரில் பார்வையிட்ட மாவட்ட செயலர்



**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் நேரடியாக இன்று பார்வையிட்டார்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக மழையுடனான காலநிலை நீடித்துவரும்

2

# மேலும் 41 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2

# எனது அமைச்சின் செயலருடன் பணியாற்ற முடியாமல் உள்ளது

## மஹிந்தவிடம் கல்வி அமைச்சர் முறையீடு



தனது அமைச்சின் செயலாளருடன் இணைந்து பணியாற்ற முடியாமல் உள்ளது எனக் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளார்.

குறித்த பதவிக்கு வேறு ஒரு பொருத்தமான நபரை நியமிக்குமாறும் தினேஷ் குணவர்தன பிரதமரிடம் தெரிவித்துள்ளார் எனத் தகவல்

# அமைச்சர்கள் மூவரைப் பதவி நீக்க அவசர கலந்துரையாடல்



அமைச்சரவைக் கூட்டம், அமைச்சரவை தீர்மானத்தை பகிரங்கமாக விமர்சித்த அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கும் வகையில் அரசின்

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஞானசாரரின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த செயலணியை உருவாக்குவது குறித்து தன்னுடன் கலந்தாலோசனை மேற்கொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார் என்று கொழும்பு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்பதற்கான 13 பேர் கொண்ட செயலணியொன்று சில நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதியால் அமைக்கப்பட்டது.

அதன் தலைவராக ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமையுடன், அதன் ஏனைய உறுப்பினர்களில் நான்கு முஸ்லிம்களும் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில், இந்தக் குழு குறித்து தான் மகிழ்ச்சியடையவில்லை என்று நீதி அமைச்சர் அலி சப்றி கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆளுங்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அலி சப்றி இது தொடர்பில் அதிருப்தி தெரிவித்திருந்தார் எனவும் கூறப்படுகின்றது.

## கன்னத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் கட்சித் தலைவர்களை விமர்சனங்களால் தொடர்ந்தும் தாக்கினால், பின்வரிசை எம்.பிக்களாகிய நாம் பங்காளிகளின் கன்னத்தில் அறையக்கூட தயாராகவே இருக்கின்றோம் - என்றார்.

## 'ஏ 30' கொரோனா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமண நிகழ்வுகள் மற்றும் மரண சடங்குகளின்போது சுகாதார விதிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் செயற்படுவதன் காரணமாக இந்த வைரஸ் அதிகளவில் பரவலடைவதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த புதிய வைரஸ் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்றின் புதியவொரு திரிவு அடையாளம் காணப்பட்டுள்ளது. பைஸர், அஸ்ட்ராஜெனெக்கா உள்ளிட்ட பிரதான வகைகளைச் சேர்ந்த சகல வகை தடுப்பூசிகளினூடாகவும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை உடைத்தெறிவதற்கான தன்மை புதிய திரிவான 'ஏ 30' திரிவிடம் இருக்கின்றது.

இந்தப் புதிய திரிபு பரவலடைந்தால் பாரிய நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் என்று முழு உலகமும் எச்சரிக்கை நிலையுடன் செயற்பட்டு வருகின்றது.

ஆகவே, இது தொடர்பில் நாமும் அவதானம் செலுத்த வேண்டும். கொரோனா முற்றாக நிறைவுக்கு வந்துவிட்டது என்று எண்ணி மக்கள் செயற்பட்டால் மேலும் நான்கே வாரங்களில் இந்தத் திரிவின் பிரதிகூலத்தை அனுபவிக்க நேரிடும்- என்றார்.

## எனக்கு ஆலோசனை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்காகவே தவிர நாட்டுக்கு நீதியை வழங்குவதற்காக அல்ல என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் சந்திப்பில் வைத்து ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

தான் செய்யும் செயல்கள் அனைத்துக்கும் கட்சித் தலைவர்களிடம் ஆலோசனை பெறச் சென்றால், தனக்கு தேவையான நண்பர்களைத் தெரிவு செய்வதற்கும் அவர்களிம் அனுமதிபெறவேண்டிய நிலை ஏற்படும் எனவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

நீதி அமைச்சராக அலி சப்றியை தெரிவு செய்த சந்தர்ப்பத்திலும் இவ்வாறு எதிர்ப்புகள் வந்தன எனவும் ஜனாதிபதி இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.

## மேலும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 521 ஆக உயர்வடைந்துள்ளது.

## எனது அமைச்சின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், குறித்த பதவிக்காக வேறு ஒரு நபரின் பெயரையும் கல்வி அமைச்சர் இதன்போது பிரதமரிடம் பரிந்துரைத்துள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

இதுகுறித்துஜனாதிபதிசெயலகத்துக்கு அறிவிப்பதோடு, தான் ஜனாதிபதியிடம் கலந்தாலோசிக்கிறேன் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சருக்குப் பதிலளித்துள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமைச்சர்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்வரிசை உறுப்பினர்கள் அவசர கலந்துரையாடல் ஒன்றை நடத்தி வருகின்றனர் என்று ஆளும் கட்சியை மேற்கோள்காட்டி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்திக் குறிப்பில், அமைச்சரவை தீர்மானத்தை பகிரங்கமாக விமர்சித்த குற்றச்சாட்டின் பேரில் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை நீக்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

தற்போதையஐரோப்பியபயணத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வந்தவுடன் இதனை விளக்கமளிக்க, பின்வரிசை உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர். அதற்கு முன்னதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது - என்றுள்ளது.

இதேவேளை, அரசை விமர்சிக்காமல் அமைச்சுப் பதவியைத் துறந்துவிட்டு, சமூகத்தில் எதனையும் கூற வேண்டும் என பின்வரிசை உறுப்பினர்கள் ஏற்கனவே பகிரங்கமாகத் தெரிவித்து வரும் நிலையில், கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு விற்பனை செய்தல் உட்பட எல்.என்.ஜி. கொடுக்கல் - வாங்கல்களுக்கு எதிராக 11 அரச கட்சிகளின் பங்குபற்றுதலுடன் கடந்த 29ஆம் திகதி புறக்கோட்டையில் மக்கள் பேரவை கூட்டப்பட்டு அரசை மேற்படி மூன்று அமைச்சர்களும் கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீக்கப்பட்டது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையை நீக்குவதற்கான தீர்மானம் கடந்த வெள்ளிக்கிழமை கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்டது.

மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தி, நாட்டை வழமைக்குக் கொண்டு வரும் செயற்பாட்டில், மாகாண மற்றும் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர்கள் அதிக பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி கோரியுள்ளார்.

அத்துடன் சுகாதாரத் தரப்பினர் உள்ளிட்ட முன்வரிசை சேவையாளர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## குடாநாட்டில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலேயே பல பகுதிகள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கல்லுண்டாய், நாவாந்துறை, அச்சுவேலி போன்ற பகுதிகளுக்கு விஜயம் செய்த மாவட்ட செயலர் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டமையுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.


**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## 13ஐ வலியுறுத்துவது அவசியமா?

13 ஆவது திருத்தத்தையாவது முழு அளவில் நடைமுறைப்படுத்தும்படி இலங்கை அரசை வலியுறுத்துமாறு தமிழர் தரப்பின் ஒன்றுபட்ட கோரிக்கையை இந்தியாவுக்கு முன் வைக்கும் நோக்குடன் தமிழ் கட்சிகள் சில நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தை நடத்த விருக்கின்றன. அந்தக் கூட்டத்தில் பங்கு பெறுவதில்லை என்ற முடிவை எடுத்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஆனால் அதன் அர்த்தம் இந்தியாவின் பங்கை குறை கூறுவது அல்ல என்றும் கோடி காட்டி இருக்கின்றது. அதனை இந்திய தரப்புக்கும் உரிய மட்டங்களில் தெளிவுபடுத்த தமிழரசு தீர்மானித்திருப்பதாகவும் தெரிகின்றது.

அதுமாத்திரமல்ல, இத்தகைய கூட்டமொன்று இப்போதைக்கு அவசியமானது அல்ல என்பதை கூட்ட ஏற்பாட்டாளர்களான ரெலோ செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் சித்தார்த்தன் ஆகியோருக்கு தொலைபேசி மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை இது விடயத்தில் அதன் நிலைப்பாடு தெளிவானது.

13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட போதே அதற்கு முன்னோடியாக அமைந்த இலங்கை –இந்திய ஒப்பந்தத்தில் இருந்த குறைபாடுகளை அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் மூவரும் எழுத்தில் இந்தியாவிடம் தெரிவித்திருந்தனர்.

அதாவது, இந்தியாவிடம் 13வது திருத்தம் அல்ல, அதையும் தாண்டியது தமிழர்களின் எதிர்பார்ப்பு என்பதை தமிழ் தலைவர்கள் அந்த 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட அந்தக் காலத்திலேயே தெளிவாகவும் அழுத்தம் திருத்தமாகவும் இந்தியாவுக்குக் கோடி காட்டி விட்டனர்.

அதுமட்டுமல்ல, இந்தியப் பிரதமர்கள் மன்மோகன்சிங், நரேந்திர மோடி ஆகியோருடன் கூட்டமைப்புத் தலைவரான சம்பந்தன், நேரில் பேசிய சமயங்களில் எல்லாம் 13 ஆவது திருத்தத்தையும் தாண்டி '13 பிளஸ்' நடைமுறையாக்கத்தின் அவசியம் குறித்து இந்தியப் பிரதமர்களே சம்பந்தனிடம் எடுத்துரைத்திருக்கின்றனர்.

தவிரவும், இலங்கை நாட்டின் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ போன்றோர் யுத்தம் முடிந்த பின்னர் கூட தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் 13 பிளஸ் வரை செல்வோம் என இந்தியத் தலைவர்கள் மற்றும் சர்வதேசப் பிரதிநிதிகளிடம் உறுதி கூறியிருக்கின்றார்கள்.

மேலும், நல்லாட்சி அரசில் முக்கால் கிணறு வரை முன்னேறிய அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாடு, 13 ஆவது திருத்தத்தின்படியான மாகாணசபை முறைமைக்கும் அப்பாற்பட்ட விடயமாக அமைந்திருந்தது. அந்த ஏற்பாட்டுக்கு அப்போதைய நாடாளுமன்றத்தின் முழு அங்கீகாரம் இருந்ததும் கவனிக்கப்பட வேண்டியது.

பிரிக்கப்படாத, பிரிக்கமுடியாத, ஒன்றுபட்ட நாட்டுக்குள் சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி நிற்கின்றது தமிழரசு உட்பட்ட தமிழ் கூட்டமைப்பு. அது 13ஆவது திருத்த ஏற்பாட்டுக்கு அப்பாலானது.

13ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்ல வேண்டும் என்று இந்திய பிரதமர்களே வலியுறுத்தி நிற்கையில் –

அதேபோல 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் '13 பிளஸ்' கொடுப்பேன் என்று இலங்கை ஆட்சித் தலைவரே இந்தியாவுக்கு வாக்குறுதி கொடுத்து தெளிவுபடுத்தி இருக்கையில் –

13க்கு அப்பாற்பட்ட விடயங்களைத் தீர்வு விவகாரமாக தமிழர் தரப்பு பிரஸ்தாபித்து உரையாடிக் கொண்டிருக்கையில் –

இந்தியா, இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து, தான் கொண்டுவந்த 13 ஆவது திருத்தத்தையாவது முழு அளவில் நடைமுறைப்படுத்தும்படி அதனிடம் கேட்க வேண்டிய தேவை தமிழர் தரப்புக்கு எழவில்லை, அதைத் தனது பொறுப்பாகத் தமிழர்களுக்குத் தானாகவே செய்து கொடுக்க வேண்டிய தார்மீகக் கடமைப்பாடு இந்தியாவிற்குத்தான் உள்ளது. அதனால் இந்தக் கட்டத்தில் இப்படி கூட்டம் போட்டு, தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்பதுதான் தமிழரசின் – அதன் மூத்த தலைவர் சம்பந்தனின் – நிலைப்பாடு. அதில் நியாயம் இருப்பதாகவே தோன்றுகிறது.

# கொழும்புத் துறைமுக நகரில் 72 முதலீடுகளுக்கு சந்தர்ப்பம்

## வெளியான தகவல்

கொழும்பு துறைமுக நகரில் 72 புதிய முதலீட்டு சந்தர்ப்பங்களுக்காக முதலீட்டாளர்களை அழைக்க எதிர்பார்த்துள்ளோம் என துறைமுக நகர ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த 72 முதலீட்டு சந்தர்ப்பங்களில் 6 முதலீடுகள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன.

ஏனைய முதலீட்டு வாய்ப்புகளை பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு வழங்க துறைமுக நகர ஆணைக்குழு உத்தேசித்துள்ளது. முதலீட்டின் தன்மை, அவர்கள் பெற்றுக்கொள்ளும் காணிகள் பரப்பளவு ஆகியவற்றுக்கு அமைய 72 முதலீடுகளுக்கான கட்டணங்கள் அறவிடப்படும்.

முதலீடுகளை ஆணைக்குழு ஏற்றுக் கொண்ட பின்னர், இலங்கை வர்த்தக சங்க பதிவாளர் அலுவலகத்தல் முதலீடுகள் குறித்த பதிவுகளை மேற்கொண்ட பின்னர், பணிகளை ஆரம்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அந்தப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அடுத்த சில மாதங்களில் பணவீக்கம் அதிகரிக்கும்

## மத்திய வங்கியின் ஆளுநர் தகவல்



பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ளதன் அடிப்படையில் அடுத்த சில மாதங்களில் பணவீக்கம் அதிகரிக்கக் கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் 6–7 சதவீதமாக இருந்த பணவீக்கம், அடுத்த சில மாதங்களில் சுமார் 8.5 சதவீதமாக அதிகரிக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் 2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் பணவீக்கம் 4 முதல் 6 வீதம் என்ற மட்டத்துக்கு குறையும் என எதிர்பார்க்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது சம்பந்தமான அறிக்கையை இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களம் தனக்கு வழங்கியுள்ளது எனவும் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டுள்ளார்.





# முல்லை தமிழ், முஸ்லிம் பகுதிகளுக்கு ரிஷாத் பதியுதீன் எம்.பி. விஜயம்

## ஆரத்தழுவி ஆறுதலளித்த மக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம் செய்த மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனை ஆரத்தழுவி, அங்குள்ள மக்கள் ஆறுதலளித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நீராவிப்பிட்டி மற்றும் முள்ளியவளை ஆகிய பிரதேசங்களுக்கு நேற்று (சனிக்கிழமை) காலை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் விஜயம் செய்து, அங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது வயோதிபர்கள், தாய்மார்கள் அவரை வரவேற்று சுகம் விசாரித்ததுடன், அவரின் நல்வாழ்வுக்காகத் தொடர்ந்தும் பிரார்த்திக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தான் சிறையிலிருந்த போது, தனக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

# சூடானில் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு; மூவர் உயிரிழப்பு



சூடானில் ஜனநாயக ஆதரவு போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர், துப்பாக்கிச் சூடு மற்றும் கண்ணீர் புகை தாக்குதலை நடத்தியதில் குறைந்தது மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாரம் மட்டும் இடம்பெற்ற மோதலில் 10 க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் பாதுகாப்புத் தரப்பினரால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் அப்துல்லாவை மீண்டும் பதவியில் அமர்த்தக் கோரி, தலைநகர் கார்ட்டூம் மற்றும் பிற நகரங்களில் நேற்று சனிக்கிழமை ஆயிரக் கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேரடி துப்பாக்கிச் சூடு நடத்தப்படவில்லை என உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளபோதும் இதில் சுமார் 100 பேர் காயமடைந்துள்ளனர் என மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். ஜனநாயக சார்பு கூட்டணி தலைமையிலான அரசாங்கத்தை கலைத்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ள இராணுவம் உள்நாட்டுப் போரை தவிர்ப்பதற்கும் அரசியல் உட்பூசல்களை கட்டுப்படுத்தவும் அவசரகால நிலையை பிரகடனம் செய்துள்ளது. இந்நிலையில் இராணுவத்தின் குறித்த ஆட்சிகளைப்பு நடவடிக்கைக்கு சர்வதேச அளவில் பரவலான கண்டனங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## ஆங் சான் சூகியின் உதவியாளருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிப்பு



மியன்மாரில் இராணுவத்தால் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட ஆங் சான் சூகியின் நெருங்கிய உதவியாளரும் முன்னாள் நாடாளுமன்ற அவைத் தலைவருமான வின் டேயினுக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தேசத் துரோகக் குற்றச்சாட்டின் பேரில் இந்தத் தண்டனையை இராணுவ ஆட்சியாளர்கள் வின் டேயினுக்கு விதித்துள்ளனர்.

தற்போது வின் டேயின் நல்ல உடல்நிலையில் இருப்பதாகவும் சிறைத் தண்டனையை எதிர்த்து அவர் மேல் முறையீடு செய்வார் எனவும் வின் டேயினின் வழக்கறிஞர் மியின்ட் த்வின் தெரிவித்துள்ளார். 80 வயதாகும் வின் டேயின், மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களால் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தேசிய ஜனநாயகக் கட்சியின் முதல் முக்கியத் தலைவர் ஆவார் முன்னாள் இராணுவ வீரரான அவர், ஏற்கெனவே இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், இருதய மற்றும் தைராய்ட் பாதிப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள அவர், நடக்க முடியாமல் சக்கர நாற்காலியைப் பயன்படுத்தி வருகிறார். மேலும், அவர் சுவாசிப்பதற்கு செயற்கையாக ஒட்சிசன் செலுத்த வேண்டிய நிலை உள்ளது.




## சீனாவுக்கு எதிராக டோக்கியோவில் போராட்டம்

ஷின்ஜியாங், திபெத், ஹொங்கொங் மற்றும் மங்கோலியாவில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்களுக்கு சீனா பொறுப்புக்கூற வேண்டும் என்பதை ஜப்பான் மற்றும் சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்தி போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள சீனத் தூதரகத்திற்கு முன்னால் 50 க்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் ஒரு மணி நேரம் போராட்டம் நடத்தினர்.

'இனப்படுகொலை ஒலிம்பிக்கிற்கு 100' நாள்கள் என்ற பதாகையின் கீழேயே ஆர்வலர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தினை நடத்தியிருந்தனர்.

இதன்போது, ஹொங்கொங்கில் சீன அதிகாரிகளால் ஜனநாயகக் குரல்கள் நசுக்கப்படுவதை முன்னிலைப்படுத்தியதோடு அடுத்த ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக்கை புறக்கணிக்குமாறும் சர்வதேச சமூகத்தை வலியுறுத்தினர்.

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான சீனாவின் செயற்பாடுகள், தாய்வான் ஜலசந்தியில் 'ஆபத்தான ஆக்கிரமிப்பு' இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

இதேவேளை, ஜப்பானில் நடைபெற்ற கருத்துக் கணிப்பொன்றில், 90 சதவீதமானவர்கள் சீனா குறித்து எதிர்மறையாகக் கருத்து வெளியிட்டுள்ளனர். அதேநேரம் ஜப்பானின் பொதுத் தேர்தல்களின் போது சீனா குறித்த விடயங்கள் அரசியல் விவாதத்தின் ஒரு பகுதியாக இருப்பதில்லை, இருப்பினும், தற்போது தேர்தலுக்கு முன்னதாகவே, சீனாவின் நடவடிக்கைகள் விவாதப்பொருளாகியுள்ளன.

ஜப்பானுக்கும் சீனாவுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் மீண்டும் தொடங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதற்கு சில மாதங்களுக்கு முன்னதாகவே இந்த வேறுபாடுகளும் பொதுக் கருத்துகளும் பகிரங்க வெளிக்கு வந்துள்ளன.

இதேவேளை, சீனாவிற்கு வலுவானதொரு செய்தியை அனுப்பும் நோக்கில், ஜப்பானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதன் இனச் சிறுபான்மை பிராந்தியங்களில் சீனாவின் 'இனப்படுகொலையை' விமர்சிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுவது பற்றி ஆராய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**Jaffna College Institute of Technology**
***Calls* for the following courses**

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

## காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு இன்று ஆரம்பம்

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் இடம்பெறவுள்ளது.

காலநிலை மாற்றங்களும், அதற்கு முகங்கொடுத்துச் செயற்படுவதற்காக நாடுகள் திட்டமிடும் வழிமுறைகள் தொடர்பாக இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன், குறித்த மாநாடு இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை, நாளை மற்றும் நாளை மறுதினங்கள் உலகத் தலைவர்களின் மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில், 197 நாடுகளின் அரச தலைவர்கள், அரச பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுமார் 25 ஆயிரம் பேர் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக மண்ணில் உணவுத் தூய்மைவாத சிந்தனைகளை ஊக்குவிக்கக்கூடாது என ஜோதிமணி எம்.பி. கருத்து



'ஒரு குறிப்பிட்ட மதத்தினர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் இறைச்சிக் கடைகள் மூடப்படும், என்று தமிழக அரசு சொல்வது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும்' என காங்கிரஸ் எம்.பி.யான ஜோதிமணி தெரிவித்துள்ளார்.

தீபாவளிப் பண்டிகை வருகிற நவம்பர் 4 ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. அதே நாளன்று மகாவீர் முத்தி நாளும்கடைப்பிடிக்கப்படுவதால், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் அனைத்து இறைச்சிக் கடைகளையும் மூட மாநகராட்சி நிர்வாகம் உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவு, இறைச்சிக்கடை உரிமையாளர்களையும், தீபாவளி நாளில் இறைச்சி உணவை விரும்புவோரையும் பாதிப்பதாகத் தெரிவித்து சென்னைமாநகராட்சியின்உத்தரவைத் திரும்பப் பெறவேண்டும் என தமிழக இறைச்சிக்கடை உரிமையாளர்கள் சங்கம் சார்பில் தலைமைச் செயலாளரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்த நிலையில் தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில், பொதுமக்களின் உணர்வுகளை கருத்தில் கொண்டும் பல்வேறு அமைப்புகளிடமிருந்து வந்த கோரிக்கையைப் பரிசீலித்தும் தீபாவளியன்று தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இறைச்சிக் கடைகள் திறக்க அனுமதி அளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில், ஜெயின் மதத்தினர் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளிலும் ஜெயின் மத வழிபாட்டுத் தலங்களைச் சுற்றியுள்ள இடங்களில் மட்டும் இறைச்சிக் கடைகள் மூடப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி தனது டுவிட்டர் பதிவில், "சைவத்தைப் போல அசைவமும் ஓர் உணவுமுறை. கோவில்களில் கிடாய் வெட்டிப் பொங்கல் வைக்கும் மரபு நம்முடையது. அப்படியிருக்கும்போது ஒருகுறிப்பிட்டமதத்தினர்பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் இறைச்சிக் கடைகள் மூடப்படும் என்று தமிழக அரசு சொல்வது ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும். பெரும்பான்மை வாதம் ஆபத்தானது. பெரும்பான்மையோர் அசைவம் சாப்பிடுவதால்சைவம்சாப்பிடுபவர்களது பழக்கத்தைக் கேள்விக்குள்ளாக்க முடியாது. அப்படிச் செய்யவும் கூடாது. அதேபோல்தான் இதுவும். ஒவ்வொருடைய தனிப்பட்ட நம்பிக்கைகளும் வீட்டிற்குள் தான் இருக்கவேண்டும். பொதுவெளியில் அல்ல. நமது மண்ணில் நமது மரபும், நமது கலாசாரமும், வாழ்வியலும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழக அரசு இம்மாதிரியான நிர்ப்பந்தங்களுக்குப் பணியக்கூடாது. தமிழக மண்ணில் இதுபோன்ற உணவுத் தூய்மைவாத ஆர்.எஸ்.எஸ். சிந்தனைகளை ஊக்குவிக்கக்கூடாது. அது நீண்டகால நோக்கில் நமது மண்ணிற்கும் மரபிற்கும் எதிர்காலத்திற்கும் மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தும்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அடுத்த இரண்டு மாதங்கள் சவாலாக இருக்கும் கலெக்டர்களுக்கு ராதாகிருஷ்னன் கடிதம்



மழைக் காலங்களில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தத் தயாராக இருக்கவேண்டும் என்று மாவட்ட கலெக்டர்களுக்கு தமிழக சுகாதாரத் துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் கடிதம் எழுதியுள்ளார்.

மழைக்காலம் மற்றும் குளிர் காலத்தில் பருவ கால நோய்களான டெங்கு உள்ளிட்ட நோய்கள் அதிகம் பரவ வாய்ப்புள்ளன.

இதனால்,பொதுமக்கள்கவனமுடன் இருக்கவேண்டும்எனஅரசுவலியுறுத்தி வருகிறது. உடலையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியம். டெங்கு காய்ச்சலால் ஒருவர் பாதிக்கப்பட்ட நிலையில் உடனடியாக மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ளாத நேரத்தில் உயிரிழப்பு அபாயம் ஏற்படும்.

கண் வலி, குமட்டல், தலைவலி, வாந்தி, எலும்பு வலி, தடிப்புகள், அசாதாரண இரத்தப்போக்கு, மூட்டு வலி, சோர்வு உள்ளிட்டவை டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகளாகும். டெங்கு வைரஸில் இருந்து தப்பிக்க சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். நுளம்புகள் உற்பத்தியாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வீட்டில் இருக்கும் தேவையற்ற பொருள்களை நீக்கி சுத்தமாக வீடு இருக்கும் வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தமிழக சுகாதாரத் துறை சார்பில்அறிவுறுத்தல்கள்விடுக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் மாவட்ட கலெக்டர்களுக்கு சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், கொரோனாவைக் கட்டுப்படுத்தும் பணிகளில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் டெங்குவையும் மழைக் காலங்களில் ஏற்படும் ஏனைய நோய்களையும் கட்டுப்படுத்தத் தயாராக இருக்க வேண்டும் என்றும் சுகாதாரத் துறைக்கு அடுத்த இரண்டு மாதங்கள் சவாலானதாக இருக்கும் என்பதால் நோய்த் தடுப்புப் பணிகளில் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.




## டென்னிஸ் நட்சத்திரம் லியாண்டர் பயஸ் திரிணாமுல் காங்கிரஸில் இணைந்தார்

இந்தியாவின் நட்சத்திர டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ், கோவாவில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி முன்னிலையில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

கோவாவில் 2022 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள சூழலில், அனைத்து தொகுதிகளிலும் போட்டியிட திரிணாமுல் காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது. இதற்காக இரண்டு நாள் சுற்றுப்பயணமாக மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி கோவா சென்றுள்ளார். அங்குவைத்து நட்சத்திர டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் திரிணாமுல் காங்கிரஸில் இணைந்துள்ளார்.

இது தொடர்பாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள டுவிட்டில், நமது தலைவர் மம்தா பானர்ஜி முன்னிலையில் லியாண்டர் பயஸ் நம்முடன் இணைந்தார் என்பதைப் பகிர்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு நபரும் 2014 ஆம் ஆண்டு முதல் எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஜனநாயகத்தின் விடியலை நாம் உறுதி செய்வோம் என்று தெரிவித்துள்ளது.

முன்னதாக, பொலிவுட் நடிகை நஃபிஸா அலி மற்றும் மிரினாலினி தேஷ்பிரபு ஆகியோரும் மம்தா முன்னிலையில் திரிணாமுல் காங்கிரஸில் இணைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மருத்துவமனையில் உள்ள ரஜினியிடம் உடல்நலம் விசாரித்தார் ஸ்டாலின்

உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ரஜினியிடம் தமிழகமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் நேரில் சென்று உடல்நலம் பற்றி விசாரித்துள்ளார்.

திரைத்துறை வாழ்நாள் சாதனைக்காக டெல்லியில் தாதா சாகேப் பால்கே விருது பெற்றுத்திரும்பிய நடிகர் ரஜினிகாந்துக்கு கடந்த 28 ஆம் திகதி திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கான் மற்றும் முழு உடல் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில், அவரது மூளைக்குச் செல்லும் இரத்தக்குழாயில் சிறிய அடைப்பு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்பின்னர் நடிகர் ரஜினிகாந்த் மருத்துவமனையிலேயே ஓய்வு எடுத்து வருகிறார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இன்று காவேரி மருத்துவமனைக்கு சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடிகர் ரஜினிகாந்திடம் உடல்நலம் பற்றி விசாரித்தார். தொடர்ந்து உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ரஜினியின் உடல்நலம் பற்றி மருத்துவர்களிடம் அவர் கேட்டறிந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பௌத்தர்கள் வாழாத நெடியகல்மலையிலும் புத்தருக்கு ஆலயமா என்கின்றார் ஸ்ரீநேசன்

'பௌத்தர்கள் இல்லாத வடமுனை நெடியகல்மலையிலும் பௌத்த ஆலயம் அமைக்கப்படவுள்ளது, அப்படியென்றால் பெரும்பான்மையினக் குடியேற்றம் நடைபெறவாய்ப்புள்ளது' என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பின் எல்லைக் கிராமங்களாகவும் பொலன்னறுவை மாவட்டத்தின் எல்லையிலும் வடமுனை, ஊத்துச்சேனைக் கிராமங்கள் உள்ளன.

பொலன்னறுவை மாவட்டத்தில் இருந்து பேரினவாத வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பல தமிழ் மக்கள் 1958, 1983 களில் இங்கு குடியேறியுள்ளனர்.

மேளை வந்தாறுமூலை, மண்டூர், மலையக்க்கிராமங்கள் சார்ந்த மக்களும் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு என்ற தொழில் அடிப்படையில் இங்கு குடியேறியுள்ளனர்.

இந்த மக்களின் குடியேற்ற விடயத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கவாசகம், பொறியியலாளர் மரியசிங்கம் போன்றவர்கள் பக்கத் துணையாக இருந்துள்ளார்கள்.

அதேவேளை அத்துமீறிய பெரும்பான்மை இனத்தவரின் குடியேற்றத்தை அகற்றுவதில் முன்னாள் அமைச்சர் தேவநாயகமும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

இன்றைய நிலையில் வடமுனை, ஊத்துச்சேனை மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வடமுனையில் இருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள நெடியகல் மலையில் பௌத்த ஆலயம் ஒன்றை அமைப்பதற்குக் கிழக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

எத்தனையோ வீதி அபிவிருத்தித் திணைக்கள வீதிகள் உடைந்து சிதைந்து கிடக்க, காட்டின் ஊடாக நெளு மலைக்காக புதிய 5 கி.மீ. வீதி அபிவிருத்தித் திணைக்களம் மூலமாக அமைக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த ஆலயம் அமைக்கப்படவுள்ளது. அப்படியென்றால் பெரும்பான்மையினக் குடியேற்றம் நடைபெற வாய்ப்புள்ளது.

பொலன்னறுவை மாவட்ட சொறுவில், கறுப்பளை, முத்துக்கல், மன்னம்பிட்டி, வெலிக்கந்த போன்ற கிராமங்களில் இருந்து உயிர் இழப்புகள், சொத்திழப்புகள் மத்தியில் வடமுனை ஊத்துச்சேனையில் குடியேறிய மக்களை நோக்கி மேலுமொரு பெரும்பான்மையினக் குடியேற்றம் துரத்தி வருகின்றது போல் தெரிகிறது.

பிக்குகள், தொல்லியலாளர்கள், ஆளுநர் தரப்பினர், ஆர்.டி.டியினர் அங்கு அடிக்கடி பிரசன்னமாகி வருகின்றனர். மயிலத்தமடு, மாதவணை, காரமுனை, நெளுக்கல் மலை என்று மட்டக்களப்பு மண்ணை ஆக்கிரமிப்பதற்கான திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்ந்தும் கதவுகளைத் தட்டிக்கொண்டே இருக்கின்றன.

வியத்மக அமைப்பு சார்ந்தவர்கள் ஓரின சிங்கள மக்களை மாத்திரம் திருப்திப்படுத்தினால் அடுத்த தேர்தலிலிலும் பொதுஜனப்பெரமுனக் கட்சியை வெல்லச்செய்து விடலாம் என்ற மனப்பாங்குடன் செயற்படுகின்றனர்.

அதேவேளை அரணகம் விலயில் இருந்து 23 கி.மீ. வீதி மயிலத்தமடு, புலிபாஞ்சகல் நோக்கி வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூலம் அமைக்கப்படுகிறது. எல்லாம் பெரும்பான்மை சமூகக்குடியேற்ற மையமானதாக உள்ளதாகவே அறியமுடிகிறது.

தொல்லியலாளர்களும், வியத்மக அமைப்பினரும் தமிழ் பேசும் மக்களைத் தொல்லைப்படுத்துவதென்றே சபதம் எடுத்துவிட்டார்கள் போல் தெரிகிறது.

இப்படியான நிலையில் பொதுஜன பெரமுனக் கட்சியிடம் உள்நாட்டுப் பிரச்சினைகளை அதிகரிப்பதற்கான பொறிமுறைகள் இருக்கின்றனவேயொளிய, உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான எந்தப் பொறிமுறையும் இல்லை.

இவற்றைவிட வடமுனைக்குளம், மீராண்டவில், காடுகள் தோறும் மண்ணகழ்வுகள் பாரியளவில் நடைபெறுகின்றன. தடுக்க வேண்டிய ஆளுங்கட்சித் தமிழ் அரசியல்வாதிகளும் மண்ணகழ்வு வியாபாரத்தில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

இவர்கள் தமது ஆதரவாளர்கள், உறவினர்களுக்கு மண் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுத்து வருவாய்களில் பங்காளிகளாக உள்ளனர்.

மண்ணகழ்வுகளில் பொலன்னறுவை மாவட்டத்தவர்கள் 75 வீதமும், மட்டக்களப்பு மாவட்டத்தவர்கள் 25 வீதம் அளவிலும் மண் வியாபாரம் செய்கின்றனர்.

மட்டக்களப்பு வளத்தை அழித்தாவது கோடீஸ்வரர்களாக மாற வேண்டும் என்ற இலக்குடன் அதிகார அரசியல் புள்ளியர்கள் செயற்படுகின்றனர். ஆனால் உள்ளூரில் உள்ளவர்கள் உழவியந்திரம் மூலமாகக்கூடத் தேவைகளுக்கு மண்ணைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றை விடவும் வடமுனை ஊத்துச்சேனை மக்களில் கணிசமானவர்கள் விவசாயிகளாவர். அவர்களது விவசாய நிலங்கள் பல ஏக்கர்கள் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

விவசாயிகள் தமது பற்றைகள் மண்டியுள்ள விவசாய நிலங்களை அகற்றச் சென்றால் அங்கு வனவள அதிகாரிகள் இடையூறுகள் விளைவிக்கின்றனர், கைது செய்கின்றனர்.

ஆனால் வசதி படைத்தவர்கள் கனரகவாகனங்களால் காடுகளைத் தள்ளுகின்றபோது கண்டுகொள்வதில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது.

மேலும் இந்தக் கிராம மக்களால் வழிபட்டுவந்த வெள்ளிமலைப்பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமான வயல் காணி 21 ஏக்கர்கள் தனிப்பட்டவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை, யானைகளின் தொல்லை, போக்குவரத்து வசதி இன்மை, பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை, தரம்–11 வரை கற்பதற்கான பாடசாலைகள் இல்லாமை, தினசரி இயங்கக்கூடிய வைத்தியசாலை இல்லாமை, விசஜந்துகளால் உயிராபத்து போன்ற பல தொல்லைகளுடன் எல்லைப்புற மக்கள் போராடி வருகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் இந்த மக்கள் மீது அக்கறை காட்டுவது மிகக் குறைவு என்ற கருத்தை அந்த மக்கள் கொண்டுள்ளார்கள்.

அதேவேளை ஊற்றுச்சேனைக் கிராமத்தில் இருந்து சிறுவர்கள் சிறுமிகள் ஊழியமாக கிராம சேவை உத்தியோகத்தர் ஒருவர் மூலமாக கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கு 90, 93களில் அனுப்பப்பட்டுள்ளனர்.

அதில் சிறுவன் ஒருவன் 12 வயதில் 93 ஆம் ஆண்டில் குறித்த கிராம் சேவை உத்தியோகத்தர் மூலமாக அனுப்பப்பட்டான். அவன் இருபத்தெட்டு ஆண்டுகள் கடந்தும் இன்னும் பெற்றோரை வந்து சேரவில்லை என்கின்ற மனித உரிமை மீறலும் நடைபெற்றுள்ளது.

பாமர மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் சில அரச உத்தியோகத்தர்களும் இருக்கத்தான் செய்கிறார்ர்கள். அதேவேளை அர்ப்பணிப்பான உத்தியோகத்தர்கள், அதிகாரிகளை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இப்படியான எல்லைப்புற கிராம மக்களின் பிரச்சினைகளை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று தீர்க்க வேண்டியது தார்மீகக் கடமையாகும். அண்மையில் ஓர் அரசியல்வாதியும் பரிவாரங்களும் வடமுனை ஊத்துச்சேனை ஊடாக வந்துள்ளார்கள். அவர் மக்களை விடுத்து மீராண்டகுளம் மண்ணைப் பார்த்துச் சென்றனர் என மக்கள் கூறுகின்றனர்.

இப்படித்தான் மட்டக்களப்பு மண் மீட்பர்கள் மண் வர்த்தகர்களாக மாறியுள்ளனர். இவ்வாறாக எல்லைக்கிராம மக்கள் பல தொல்லைகளைச் சுமந்து நெருக்கடிக்குள் வாழ்கிறார்கள்.

ஆளுங்கட்சித் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆளுங்கட்சியின் பொம்மைகளாக இருந்து தலையாட்டிகளாகவும், கைதூக்கிகளாகவும் இருந்து காலத்தைக் கடத்துகிறார்கள். பதவி சுகம், பண சுகத்தில் மிதக்கவே விரும்புகிறார்கள் என சுட்டிக்காட்டியுள்ளார்.

Personal English Classes

K Ganesh (BA.Pera)
தனியாக அவரவர் தரத்தில் இருந்து மேலே படித்தல் வகுப்பில் பேசுதல் தெளிவான கற்பித்தல் Grade 7- GCE OL AL
பட்டதாரிகள் , தொழில்புரிவோர்
Spoken Grammar கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

இறைச்சிக் கோழி விற்பனை
புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500


சொர்க்கம் திருமண சேவை
இல. 102/A பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்.

| மணமகள் விபரம் | மணமகன் விபரம் |
| --- | --- |
| பிறந்த திகதி :- 1984.09.04<br>மதம்:- இந்து<br>ஜாதி :-வேளாளர்<br>நட்சத்திரம்: - மூலம்<br>தகைமை:- MSc in Chemistry UK Permanent Residence<br>எதிர்பார்ப்பு: - உள்ளூர் படித்த மணமகள் | பிறந்த திகதி :- 1990.11.07<br>மதம்:- இந்து<br>ஜாதி :-வேளாளர்<br>நட்சத்திரம்: - திருவாதிரை<br>தகைமை:- Haves Techician Machine Operator<br>எதிர்பார்ப்பு:- கனடா அழகிய உள்ளூர் பெண் |
| பிறந்த திகதி :-1983.12.31<br>மதம்:-இந்து<br>ஜாதி :-வேளாளர்<br>நட்சத்திரம்: -அனுசம்<br>தகைமை:- B.Com QA Technician Canada Divorce<br>எதிர்பார்ப்பு: -இலங்கை விவாகரத்தான மணமகள் | பிறந்த திகதி :-1990.01.01<br>மதம்:- இந்து<br>ஜாதி :-வேளாளர்<br>நட்சத்திரம்: - சதயம்<br>தகைமை:- A/Level UK Courier Service<br>எதிர்பார்ப்பு:- யாழ்ப்பாணத்து அழகிய பெண் |
| பிறந்த திகதி :-1986.10.29<br>மதம்:-இந்து<br>ஜாதி :-வேளாளர்<br>நட்சத்திரம்: -கேட்டை<br>தகைமை:- B.Com Banker<br>எதிர்பார்ப்பு: -படித்த அரச தொழில் நுஷ வெளிநாடு | பிறந்த திகதி :-1982.11.08<br>மதம்:-இந்து<br>ஜாதி :-வேளாளர்<br>நட்சத்திரம்:-ஆயிலியம்<br>தகைமை:- BA, Masters 1st Semester UK Software Engineering<br>எதிர்பார்ப்பு:- கனடா படித்த யாழ்ப்பாண பெண் |
| பிறந்த திகதி :-1994.03.05<br>மதம்:-இந்து<br>ஜாதி :-வேளாளர்<br>நட்சத்திரம்: -கேட்டை<br>செவ்:- 2ல் சூரி/ செவ்<br>தகைமை:-Diploma in Medical administration<br>எதிர்பார்ப்பு: கனடா யாழ்ப்பாணத்து படித்த மணமகள் | பிறந்த திகதி :-1981.11.10<br>மதம்:-இந்து<br>ஜாதி :-வேளாளர்<br>நட்சத்திரம்:-அச்சுவினி<br>தகைமை:-B.Eng Electrical and Electronic Engineer<br>எதிர்பார்ப்பு:-உள்ளூர் அரச தொழில் பெண் |

0776505097
0778876969
தலைமை அலுவலகம் : கனடா 001416661855

# ஜோர்டான் பந்துவீச்சில் திணறிய ஆஸ்திரேலியா இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி



ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் ஆஸ்தி ரேலிய அணிக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

சூப்பர் -12 சுற்றின் நேற்றைய இரண்டாவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ஆஸ்திரேலிய அணி, இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஓட்டங்களை எடுக்கத்திணறி, 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அணித்தலைவர் ஆரோன் பின்ச் 44 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இங்கிலாந்து அணியின் கிறிஸ் ஜோர்டான் 3 விக்கெட்டுக்களையும், கிறிஸ் வோக்ஸ், டைமல் மில்ஸ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அதனையடுத்து, 126 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 11.4 ஓவர்களிலேயே இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களை எடுத்திருந்தார். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் கிறிஸ் ஜோர்டான் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலமாக விளையாடிய 3 போட்டிகளிலும் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி குழு 1 இல் 6 புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதலிடத்தைத் தக்கவைத்துள்ளது.

# ஆப்கான் அணியின் முன்னாள் தலைவர் இன்றைய போட்டியுடன் ஓய்வு பெறுகிறார்



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாடிவரும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அஸ்கர் ஆப்கன், இன்று நடைபெறும் நமீபியாவிற்கு எதிரான போட்டியுடன் தான் ஓய்வுபெறுகிறேன் எனஅறிவித்துள்ளார்.

இந்தத் தகவலை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையும் உறுதிப்படுத்தியுள்ளது.

33 வயதான அஸ்கர் ஆப்கன், ஆப்கானிஸ்தான் அணியின் தலைவராக இருந்தபோது சர்வதேச ரி-20 போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பெற்ற அணித்தலைவர் என்றபெருமையைபெற்றிருந்தார். 52 ரி-20 போட்டிகளில் அணித் தலைவராக செயற்பட்ட அவர் 42 வெற்றிகளுடன் 81.73 வெற்றிச் சதவீதத்தைக் கொண்டுள்ளார்.

மொத்தமாக 74 ரி-20 போட்டிகளில் விளையாடி 1,351 ரன்களை அவர் சேர்த்திருக்கிறார்.



# இறுதி ஓவரில் தென்னாபிரிக்காவுக்கு வெற்றி இலங்கையணிக்கு இரண்டாவது தோல்வி

உலகக்கிண்ண ரி-20 தொடரின் சூப்பர்-12 சுற்றுக்கான நேற்றைய முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுக்களால் இலங்கையணியை வெற்றிபெற்றுள்ளது.

சார்ஜாவில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

பத்தும் நிஸங்க 72 ஓட்டங்களையும் சரித் அசலங்க 21 ஓட்டங்களையும் எடுத்தனர். தென்னாபிரிக்க அணியின் ஷம்சி, ப்ரிடோரியஸ் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதனை அடுத்து 143 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 19.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணித்தலைவர் தம்பா பவுமா 46 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இலங்கையணியின் பந்துவீச்சில் ஹட்ரிக் சாதனையுடன் வனிந்து ஹசரங்க மூன்று விக்கெட்டுக்களையும் துஷ்மந்த சமீர இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக தென்னாபிரிக்க அணியின் ஷம்சி தெரிவானார்.




# றோயல் - தோமியர் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவு

கொழும்பு றோயல் கல்லூரி மற்றும் கல்கிஸை புனித தோமியர் கல்லூரி அணிகளுக்கிடையிலான, 142 ஆவது நீலங்களின் சமர் (Battle of Blues) கிரிக்கெட் போட்டி மழையின் ஆதிக்கத்துக்கு மத்தியில் சமநிலையில் நிறைவுற்றுள்ளது. அதனையடுத்து, இந்தத் தொடருக்கான வெற்றிக்கிண்ணம் தொடர்ந்தும் புனித தோமியர் கல்லூரியின் வசம் நீடிக்கிறது.

போட்டியின் முதல்நாள் ஆட்டம் சீரற்ற காலநிலை காரணமாக முழுமையாக கைவிடப்பட்ட நிலையில் இரண்டாவது நாளிலேயே போட்டி நாணயச் சுழற்சியோடு ஆரம்பித்திருந்தது. முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தினை ஆரம்பித்திருந்த புனித தோமியர் கல்லூரி அணி, ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக நிறைவுக்கு வந்திருந்த போது 87 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்து மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தது.

அதன் பின்னர் நேற்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் மழையின் குறுக்கீட்டினால் சற்று தாமதித்து ஆரம்பித்த நிலையில், தனது முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தினை தொடர்ந்த தோமியர் கல்லூரி அணி நேற்றை நாளில் இரண்டு ஓட்டங்களை மாத்திரம் மேலதிகமாகப் பெற்று, 48.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. தோமியர் கல்லூரி அணியின் யசிரு ரொட்ரிகோ, இறுதிவரை ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களைப் பெற்றிருக்க, மஹித் பெரேரா 22 ஓட்டங்களை எடுத்தார். றோயல் கல்லூரி அணியின் கிரான் பாலசூரிய 4 விக்கெட்டுக்களையும், சோனால் அமரசேகர 3 விக்கெட்டுக்களையும், கவிந்து பத்திரன 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.

அடுத்து, தனது முதல் இன்னிங்ஸினை ஆரம்பித்த றோயல் கல்லூரி அணி 21.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தினை இடைநிறுத்தியது. இசிவர ஜயவர்தன 47 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். தோமியர் கல்லூரி அணியின் யசிரு ரொட்ரிகோ 2 விக்கெட்டுக்களையும், நத்தன் கால்டெரா மற்றும் ரஜின்டோ திலகரட்ன ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 23 ஓட்டங்கள் பின்தங்கியவாறு தனது இரண்டாம் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தினை தொடங்கிய புனித தோமியர் கல்லூரி அணி, போட்டியின் மூன்றாம் நாளில் மீண்டும் மழை குறுக்கிட்டு ஆட்டம் தடைப்படும்போது ஒரு விக்கெட்டை இழந்து 32 ஓட்டங்களை எடுத்திருந்தது. அதன் பின்னரும் மழை தொடர்ந்த நிலையில் போட்டி வெற்றிதோல்வியற்று முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

# சிறுபான்மையினருடன் இணைய ஜே.வி.பிக்கு விருப்பமில்லையா?

## மனோ கணேசன் கேள்வி



சிறுபான்மையினருடன் இணைந்துசெயற்பட ஜே.வி.பிக்கு விருப்பமில்லையா? என்று தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் சிறுபான்மை கட்சிகளின் கருத்தாடல் நேற்று கொழும்பில் இடம்பெற்றபோது அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

இந்த நிகழ்வுக்கு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர்கள் வராத நிலையிலேயே மனோ கணேசனால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் நிறைவேற்று அதிகாரம் உள்ளது. அது 20 ஆவது திருத்தத்தின் ஊடாக வலுப்பெற்றுள்ளது. இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சிகளின், சிறுகட்சிகளின் கருத்துக்கள் பிரதிபலிக்க வேண்டும். இது இல்லாதபோது ஏகாதிபத்தியவாதம் தலைதூக்கும் என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதிக்கு பொறுப்புக்கூறக் கூடியவராக இருக்கக் கூடாது.அவர் நாட்டுக்கு பொறுப்புக்கூறக் கூடியவராக இருக்க வேண்டும். தேர்தலில் விருப்புத் தெரிவு என்பது அவசியமானது. இதன்போதே மக்களின் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சீர்திருத்தங்கள் உள்ளூராட்சி சபை, மாகாணசபை மற்றும் நாடாளுமன்றம் என்ற அனைத்து சபைகளுக்கும் ஒருங்கே கொண்டு வரப்படவேண்டும் என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.



# வரவு – செலவுத் திட்டம் ஒன்றை திருப்திகரமாக சமர்ப்பிக்க முடியும்

## பஸில் திட்டவட்டம்

2022 ஆம் ஆண்டிற்கான திருப்திகரமான வரவு செலவுத் திட்டத்தை தன்னால் சமர்ப்பிக்க முடியும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கண்டியில் நேற்று (சனிக்கிழமை) வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பது தொடர்பாக சீனா தனக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

# போராட்டங்களில் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தல்; காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் குற்றச்சாட்டு

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நடத்தப்படும் போராட்டங்களில் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக யாழ். மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் தலைவி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள ஐ.நா.அலுவலகத்துக்கு முன்பாகக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒவ்வொரு மாதமும் 30 ஆம் திகதி பறிகொடுத்த தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு கோரியே போராட்டங்களை மேற்கொள்கின்றபோதும் அந்த இடத்தில் புலனாய்வாளர்கள் குவிக்கப்படுகின்றனர் என அவர் கூறினார்.

மேலும் ஏன் அவர்கள் தம்மை படமெடுத்து வீடியோ எடுத்து அச்சுறுத்தும் பாணியில் செயற்படுகிறார்கள் என்றும் யாழ் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் தலைவி கேள்வியெழுப்பினார்.

# கிளிநொச்சியில் விபத்து முதியவர் ஒருவர் காயம்

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தை அண்மித்து இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) காலை 11.15 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தை அண்மித்த ஏ9 வீதியில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியைச் சேர்ந்த 75 வயதான பொன்னம்பலம் என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். பாதசாரி கடவையை பயன்படுத்தாது குறித்த முதியவர் ஏ9 வீதியை கடக்க முற்பட்டபோது டிப்பர் வாகனம் முதியவரை மோதியுள்ளதாகவும் சம்பவத்தை அவதானித்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் முதியவரின் கால் துண்டாடப்பட்டுள்ளதுடன், தலைப்பகுதியிலும் பாரிய அளவிலான பாதிப்பு ஏற்பட்ட நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# சீருடையில் ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பொலிஸார்

பொலிஸ் சீருடையில் ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர், 10 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிக்கடை பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட இந்த சந்தேக நபரின் சீருடை பையில் ஐஸ் போதைப்பொருள் இருந்ததாக அதிரடிப்படையினர் கூறியுள்ளனர்.

வெலிக்கடை பொல்வத்தை பிரதேசத்தில் 10 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் விசாரணை நடத்தும் போது, அவரது கையடக்கத் தொலைபேசிக்கு பொலிஸ் உத்தியோகஸ்தர் அழைப்பு எடுத்துள்ளார்.

தன்னிடம் 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் இருப்பதாகவும் ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருளை 12 ஆயிரம் ரூபாவுக்கு வழங்க முடியும் எனவும் பொலிஸ் உத்தியோகஸ்தர் சந்தேக நபரிடம் கூறியுள் ளார் என அதிரடிப்படை யினர் தெரிவித்துள்ளனர்.

அதிரடிப்படையினர், கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மூலம் ஐஸ் போதைப் பொருளைக் கொள்வனவு செய்கிறேன் எனக் கூறி, பொலிஸ் உத்தியோகஸ் தரை ராஜகிரிய பிரதேசத்தில் உள்ள விடுதிக்கு வரவழைத்துள்ளனர்.

அங்கு போதைப் பொருளைக் கையளிக்கும் போது அதிரடிப்படையினர் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்படும் போது, சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகஸ்தர், பொலிஸ் சீருடையுடன் கைத்துப்பாக்கியைத் தன்வசம் வைத்திருந்தார் எனவும், அதிரடிப் படையினர் கூறியுள்ளனர். சந்தேகநபர் 22 ஆண்டுகள் பொலிஸ் சேவையில் கடமையாற்றி வந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

# இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் கல்வி அமைச்சு செயலருக்கு கடிதம்

தேசிய பாடசாலை இடமாற்றச் சபையை கூட்டமைப்பினால் தற்போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

மேலும் அந்தக் கடிதத்தில் உள்ளடங்கிய விடயங்களாக –

கல்வி அமைச்சால் நிறுவனச் செயற்பாடுகள் தினசரி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோதும் நாடு பூராகவும் பாடசாலைகள் திறக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும்போதும் தேசியப் பாடசாலை ஆசிரிய இடமாற்றச்சபையைக் கூட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமை காரணமாக உங்களுக்கு எமது சங்கத்தின் எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம்.

தேசியப் பாடசாலை இடமாற்றச் சபையை அழைத்து அங்கு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளாத தேசியப் பாடசாலை ஆசிரிய இடமாற்றப் பணிப்பாளர் உட்பட்ட உங்கள் அதிகாரிகளின் தன்னிச்சையான செயற்பாடுகளால் கீழ்காணும் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என எமக்குத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அரசியல் அழுத்தம் மற்றும் நெருக்கத்தால் சுய நெருக்கத்தின் அடிப்படையில் ஆசிரிய இடமாற்றம் நடைபெறுகின்றமை.

பல இடமாற்றங்கள் உரிய தகைமையுடன் காணப்பட்ட ஆசிரியர்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுக்க முடியுமாக இருந்தும் அவற்றைப் புறந்தள்ளியிருத்தல்.

இடமாற்றம் ஒரு பாடசாலைக்குப் பாதகம் ஏற்படாத வகையில் பெற்றுக் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் தவறு செய்தவர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்வரை இடமாற்றம் வேறு பாடசாலைகளுக்குச் செல்லும் வகையில் ஆசிரியர்களை அச்சுறுத்தி அழுத்தம் கொடுக்கும் செயற்பாடுகள் நிகழ்கின்றமை.

இடமாற்றம்கோரி ஆசிரிய இடமாற்றப் பிரிவுக்கு வரும் ஆசிரியர்களுக்கு உங்கள் அதிகாரிகள் ஆசிரியர்களின் கௌரவம் மற்றும் அபிமானம் அற்றுப்போகும் வகையில் கீழ்த்தரமாக நடந்து கொள்ளுதல்.

இவ்வாறான நிலைமைகளின் கீழ் சாதாரணமாக ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுவதில்லை அரசாங்கத்தின் அரசியல் நெருக்கம் மற்றும் உங்கள் அதிகாரிகளின் சுய நெருக்கத்தால் ஆசிரிய இடமாற்றம் நடைபெறுகிறது எனவும் அவ்வாறான தொடர்புகள் இல்லாத பெருமளவான ஆசிரியர்கள் ஆசிரிய இடமாற்றத்தின்போது உங்கள் அதிகாரிகளின் அவமதிப்புக்களுக்கும், அவமானப்படுத்தல்களுக்கும் ஆளாகவும் அந்த ஆசிரியர்களின் இடமாற்ற விண்ணப்பப்படிவம், மேன்முறையீடு அடங்கிய ஆவணங்கள் தவறான இடங்களுக்கு மாறிச் செல்கின்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இது மிகவும் கூடாத மிகவும் அருவருக்கத்தக்க நிலைமை என்றும் தேசியப் பாடசாலை இடமாற்றச்சபையை உடனடியாகக் கூட்டி இடமாற்றம் சட்டத்துக்கு உட்பட்டவகையில் நடைபெற நடவடிக்கை எடுக்குமாறு உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு இடம்பெறத் தவறும் பட்சத்தில் இவ்வாறான அநீதியான நிலைமைகளுக்கு எதிராக சங்க மற்றும் சட்டச் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டிய நிலை எழும் என்பதனை அறிவிக்கிறோம். என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜெயசிங்க கையொப்பமிட்டுள்ளார் என சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2021இல் வெளியிடப்பெற்றது.